நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2021 மார்ச் 19 சுற்றறிக்கை 2021இன் 04ஆம் இலக்கம்

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல்**

தற்பொழுது காணப்படும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) 2020 ஓகத்து 26ஆம் திகதியிடப்பட்ட 2020இன் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்காக வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2021 ஏப்பிறல் 1ஆம் நாள் தொடக்கம் மற்றுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்குமாறு கோரியிருக்கிறது. எனினும், உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் கோரிக்கையின் மீது, கடன்பாட்டாளருக்கு ஏதேனும் மேலதிக தெரிவுகளை வழங்கலாமெனினும் அத்தகைய வழியில் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளை விடக் குறைவானதாக இருக்கக்கூடாது. மேலே குறிப்பிடப்பட்ட நீடிப்பு, நீண்ட கால ஏற்பாடுகளுக்கான முன்மொழிவுகளுடன் கடன்பாட்டாளர்கள் முன்வருவதற்குப் போதுமான நேரத்தினை வழங்கும் பொருட்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடன்பாட்டாளர்கள், நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னதாக நீண்ட காலப்பகுதியில் கொடுகடன் வசதிகளை மறுசீரமைப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க திட்டமொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய திட்டங்கள் உரிமம்பெற்ற வங்கிகளினால் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்யப்படும். இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஒரே விதமான காத்திரமான தன்மையினை வழங்கும் விதத்தில் விடுக்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பின்வரும் ஏற்பாடுகள் திருத்தப்பட்டிருப்பதுடன் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் மாற்றமின்றியிருக்கும்.

1. **பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்**

1(iii) படுகடன் சட்ட இசைவுத்தாமதம் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து 2021 செத்தெம்பர் 30 வரையான மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கான மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்குமான சட்ட இசைவுதாமதத்தினைக் குறிக்கிறது.

1(iv) சட்ட இசைவுத்தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சட்ட இசைவுத்தாமதத்தினைப் பெற எதிர்பார்த்திருப்பது பற்றி தொடர்பான உரிமம்பெற்ற வங்கிக்கு 2021 ஏப்பிறல் 19 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றை விடுத்தல் வேண்டும். 2021 ஏப்பிறல் 19 இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் கோரிக்கை தொடர்பில், அத்தகைய கோரிக்கையினைத் தாமதமாக செய்வதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருப்பின் அத்தகைய கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. தகைமையுடைய கடன்களின் மீள்கொடுப்பனவினைத் தீர்ப்பனவு செய்வதற்கு இயலாற்றலுள்ள எவரேனும் கடன்பாட்டாளர்கள் இந்நீடிப்பிற்கான கோரிக்கையினை விடுப்பதற்குப் பதிலாக அத்தகைய கடன் மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. **படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினைச் சீரமைத்தல்**

2(i) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து தொடங்கி 2021 செத்தெம்பர் 30 வரையான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் தவணைக் கடனொன்றிற்கு மாற்றுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் முன்னர் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையம் வட்டியினையும் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து

2021 செத்தெம்பர் 30 வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனம் மற்றும் வட்டியுடன், சமமான மாதாந்த தவணைக் கடன்கள் நீங்கலாக, ஒன்றுசேர்த்தல் வேண்டும். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதிக்கான வட்டி வீதம் 7 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

2(ii) உரிமம்பெற்ற வங்கிகள் அவ்வாறு மாற்றப்பட்ட கடன்களின் அறவிடலை, நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைந்ததும் தொடங்கலாம்.

2(v) இச்சுற்றறிக்கையின் கீழ் செயற்படும் கடன் வசதிகள் மீது 2021 ஏப்பிறல் 01இல் உள்ளவாறான ஒன்றுசேர்ந்த மற்றும் செலுத்தப்படாத தண்ட வட்டிகள் ஏதுமிருப்பின் அவற்றினை உரிமம்பெற்ற வங்கிகள் தள்ளுபடி செய்யலாம். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டி வீதங்களை விதிக்கவோ ஒன்றுசேர்க்கவோ கூடாது.

ஒப்பம்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்